ஏனைய ஸதலங்கள்

அத்திப்பட்டு முதல க்ஷேத்திரக்கோவை வரை

பாடல்கள்: 203-322 & 503

எண்	பாடல்	எண்	பாடல்
	அததிபபடடு		கநதனகுடி
203	கருதியறிவகல	214	எநதன் சடல
	அவிநாசி		கருவூர்
204	இறவாமற	215	தசையாகிய
205	மனத்திரைந்	216	நித்தப்பிணி
	ஆய்க்குடி	217	மதியால விததக
206	வாட்பட		காசி
	இராமேசுரம்	218	தாரணிக கதி
207	வாலவயதாகி	219	வேழமுணட
	உத்தரமேரூர்		கும்பகோணம்
208	சுருதி மறைக	220	கறுத்த குச்சி
209	தோலெலுமபு	221	செனிததிரு
	எடடிகுடி		கூநதலூா
210	ஆருகு மைமம்பு	222	தரையினில்
	எண்கண		கோடிநகா
211	சந்தனரு	223	நீல முகிலான
	எழுகரைநாடு		கோடைநகா
212	விரகற நோககி	224	ஆதிமுதலினி
	கந்தனூா	225	சால நெடுநாள்
		226	ஞாலமெஙகு
213	விந்து பேதிதத	227	தோழமை கொண

எண்	பாடல்
	சிக்கல்
228	புலவரை ரக்ஷிக்கும்
	சிவபுரம்
229	மனமெனும் பொருள்
	சிறுவை
230	அண்டர் பதி
231	சீதள வாரிஜ
232	பிறவியான சட
	சீகாழி
233	ஊனத்தசை
234	சருவியிகழ்ந்து
235	தினமணி சார்ங்க
236	பூமாதுரமே
	சேலம்
237	பரிவுறு நாரற
	சோமநாதன் மடம்
238	கருவழி படாது
	சோமீசுரம்
239	உரிய தவ நெறி
	தனிச்சயம்
240	உரைதத கம்ப்ரம
	திருக்கடவூர்
241	ஏட்டின விதிப்
	திருக்குடவாயில்
242	சுருதியாயியவா
	திருக்குரங்காடுதுறை
243	அலங்கார முடி
	திருக்குற்றலம்
244	வேதத்திற்
	திருச்செங்காட்டங்குடி
245	வங்கார மார்பி
	திருநள்ளாறு
246	பச்சை யொண்
	திருநாகேச்சுரம்
247	ஆசார வீனக
	திருநெல்வாயில்
248	அறிவிலாதவ
	திருப்பந்தணைநல்லூர்
249	திருவினையனுக வருவினை
	திருப்பாதிரிப்புலியூர்
250	நிணமொடு குருதி

எண	பாடல்
	திருப்பாண்டிக்கொடுமுடி
251	இருவினைப பிறவி
	திருப்புக்கொளியூர
252	பகருவ அசார
	திருப்பெருந்துறை
253	இரத்தமுரு
	திருப்போரூர்
254	திமிர மாமன
	திருமயிலை
255	அமரு மமரரி
256	அறமிலா அதி
257	இகல வருதிரை
258	கடிய வேக மாருத
259	திரைவார
	திருமாநதுறை
260	ஆங்குடல வினா
	திருமுருகன்பூண்டி
261	அவசியமுன
	திருவக்கரை
262	கலகலென

எண	பாடல
	திருவலிதாயம்
263	மருமலலியார்
	திருவாருசியம்
264	இபமாந்தர்
	திருவாடானை
265	உனரும் உட
	திருவாரூர்
266	நீதான் எத்தனை
267	பாலோதேனோ பல
268	பாலோ தேனோ மாதோ
	திருவானமியூர
269	குசமாகியாரு
	திருவிடைகழி
270	பகரு முத்தமிழ
271	படிபுனல் நெருப்ப
272	பழியுறு சடடக
273	மருக்குவாவிய
	திருவீழிமிழலை
274	எருவாய கருவாய
	திருவெஙசமாககூடல
275	வண்டுபோற

எண்	பாடல்	எண்	பாடல்
	திருவேடகளம்		பாகை
276	சதுரத்தரை	288	ஈளசரம
277	மாத்திரையா		புனவாயில
	திருவேறகாடு	289	உரையுரு சென்றது
278	கார்ச்சார		பெருங்குடி
	திருவொறறியூா	290	தவங்களில்
279	சொருபப பிர		பேரூர்
	திருவோத்தூா	291	தீராப பிணி
280	தவர் வாட்		மதுராந்தகம்
	திலதைபபதி	292	குதியாய்ந்தி
281	கிறையத்தனே	293	சயிலாங்கனே
	தேவனூர்		மதுரை
282	ஆறுமாறு மருக	294	ஆனைமுகவற்கு
283	காலிணைதது	295	கலைமேவு ஞான
284	தாரகாசுரன	296	நீதத்துவமாகி
	நாகபடடினம	297	பரவு நெருங கதி
285	ஓலமிட்டினர		மாயாபுரி
286	விருதா தெனவே	298	சிகரமருந்த
	நிம்பபுரம்		வடதிருமுல்லை வாயில்
287	அருசு வித பூத	299	அணி செவ்வியார்

ஏனைய ஸ்தலங்கள்

எண்	பாடல்	எண்	பாடல்
	வடுகூர		வெள்ளிகரம்
300	அரிய நயன	312	அடவரி மகவு
	வயலூர	313	இலவ வியென
301	அரிமருகோனே	314	சிகரிகளிடிய
302	எனைவ பிறகக	315	வதன சரோருக
303	குருதி கிருமிகள		வேதாரணியம்
304	தாமரையின	316	சுழும விணைக்கட
	வயிரவிவனம்		வேப்பூர
305	அருவரை யெடு	317	குரைகடலுல
	வாலிகொண்டபுரம்		வைத்தீசுரன் கோயில்
306	ஈயெறும்பு நரி	318	உரத்துறை
	விஜயபுரம்	319	எத்தனை கோடி
307	குடலிடை மெனபு புலால	320	மாலினா லெடுதத
	விரிஞ்சிபுரம்		ஸ்ரீமுஷ்டம்
308	நிகரில பஞச	321	கழை முதது
309	மருவு மஞசு		க்ஷேத்திரக் கோவை
	விருததாசலம்	322	கும்பகோண மொ
310	திருமொழி		
311	பசையற்ற		மதுரை
		503	முதது நவரத்ன

திருபுகழ பத விளக்கம்

		பக்கம்
1	இரு நாலு திசையில் அதிபா ...	121
2	இருடிகள் எழு பேர்	121
3	நவ நாதர்கள	121
4	அரிய சமயம் 4×6=24	121
5-7	மாயை ஐந்து, வேகம ஐந்து, பூதம் ஐந்து நாதம் ஐந்து	121
8	விதமுறு பரிவு - மூவகை அன்பு	122
9	ஓம் நம நாராயணாய	122
10	புவி ஆதாரம் ஆயகைக்கு முட்ட முற்றருள நீதி நெறி விளக்கம் - வள்ளிச சன்மார்க்கம்	122
11	சாத்திரம் ஆறு	123
12	அஞ்சு வித பூதம	123
13	கரணம் நாலு	123
14	நோய்கள் மூன்று	123
15	வாக்குக்கு அருணகிரி	123
16	வெகு சாரி சதி தாண்டவத்தர் ...	123
17	சிகரம் அருந்த வாழ்வது சிவஞானம் ...	124
18	பன்னிரு சூரியர்கள	124
19	பதி பசு பாசம்	124
20	அறுமுகவேள	124
21	பிரணவத்தின் பொருள்	124

கமந்தனா அமைநதனர் குறைந்தனா இறந்தனா
கடும வினை எனும் பவம் ஓழியேனே

இலங்கையில் இலங்கிய இலங்கருள் இலங்கு அருள்
இல் எவகனும் இலங்கு என முறை ஓதி

இமைம் கனல குரங்கொடு நெடுங்கடல் நடுங்கிட
எழுந்தருள் முகுந்தன் நன் மருகோனே
நெலம் கொடு விலங்கனும் நலங்க, அயில கொணடு ஏறி
ப்ரசண்ட கர தண தமிழ வயலூரா
பெரும பொழில கரும்புகள் அரமபைகள நிரம்பிய
பெருங்குடி மருங்கு உறை பெருமானே

பேரூர் 291

91) சாருகேசி (4½) ம 3+½
தீராப் பிணி தீர சீவாத்தும ஞான
ஊரா ஆட்சியதான தூ வாகக அருளவாயே

பாரோரக்கு இறை சேயே பாவாத கிரி ராசே

பேராற் பெரியோனே பேரூர் பெருமானே

கமந்தனர், அவ்வாழ்க்கையிலே உடன் பட்டு இருந்தனர், பின்பு தமது தொழில, பொலிவு, வலிமை இவையெலாம் குறைந்து மங்கி இருந்தனர்; (ஈற்றில்) இறந்தனர், (இப்பிணத்தை) சுடலையிலிடுங்கள் இனி, என்றெல்லாம் சொல்லப்படுகின்ற இப்பிறப்பை ஒழிக்க மாட்டேனோ.

இலங்கை நகரில விளக்கமுற்றிருந்த வீடுகளுள் விளக்கமுற்ற அருள் தயை, அன்பு) இலலா எல்லா இடத்தும் ஏ! அக்கினியே! நீ பற்றி எரிவாயாக என்று கட்டளையிட்டு (அலலது) நீதியை எடுத்துரைத்து, கனல இடும் நெருப்பை வைத்த குரங்கு அநுமனொடு, பெரிய கடலும் நடுக்கம் கொள்ள எழுந்தருளின ராமபிரானது நல்ல மருகனே! பலத்துடனே கிரவுஞ்ச கிரி) அசைவு உற வேல கொண்டு எறிந்த மிக்க வீரம் கொண்டவனே! தண்ணிய தமிழ் விளங்கும் வயலூரில் வசிப்பவரே! பெரிய சோலைகளில கரும்புகளும வாழைகளும நிரம்பி விளங்கும் பெருங்குடி எனும தலத்துக்கு அங்கே வாழ்கின்ற பெருமானே!

பேரூர் 291

௧) முடிவே இல்லாத (பிறவிப்) பிணி முடிவு பெற, சீவனாகிய ஆத்துமாவைப் பற்றிய இந்தச் சிற்றுயிர்க்கு உற ஞான நிலையைத் தருவதும், உலக முழுவதையும் ஆட்சி செய்யக் கூடியதுமான - ஓர் ஒப்பற்ற உபதேச மொழி யொன்றை (எனக்கு) உபதேசித்தருளுக

உலகோர்க்குத் தலைவனை சிவனது குமாரனே! என்றும் குழந்தையாய் இருப்பவனே! மலையரசே (குறிஞ்சி வேந்தே)

புகழினல எவரினும மேமபட்ட பெரியவனே! பேரூர் எனும் தலத்தில் எழுந்தருளியிருக்கும பெருமானே

மதுராந்தகம்

(292) கல்யாணி (15) (ட) [1+1½+1½+1½+2 / 1½+1½+1½+3]

குதி பாய்ந்து ரத்தம் வடி தொளைத தொகு
இந்த்ரியக குரம்பை வினை கூர் தூர
குணபாணடம் உற்று அகிலம் எனக கைக்
கொண்டு இளைத்து அயர்ந்து சுழவாதே

உதிதாரம் பரத்தை உயிர் கெடப் பொற்
கிண்கிணிச் சதங்கை விதகீத

உபய அம்புய புணையை இனிப் பற்
றும் கருத்தை என்று தருவாயே
கதை சாரங்க கடகம் வளை அடற் சக்
ரம் தரித்த கொண்டல் மருகோனே

கருணை அஞ்சனக் கமல விழிப் பொற்
பைம்புனக் கரும்பின் மணவாளா

மதன அந்தகர்க்கு மகவு எனப் புத
மந தனிற் பிறந்த குமரேசா
மதுராந்தகத்து வடதிருச் சிற
ம்பலத்து அமர்ந்த பெருமானே.

மதுராந்தகம் 292

குதித்துப் பாய்ந்து, ரத்தமானது வடிகின்ற தொளைகளை உடையதும் (தொக்கு) தோலொடு கூடியதும், (இந்த்ரியம்) ஐம்பொறிகளுடன் கூடியதுமான உடல், வினை மிகுந்து (தார) நிரம்பியுள்ள முக்குணங்களுக்கு இருப்பிடமான உடம்பு - இதனை (உறு) அடைந்து, (அதில்) இந்த உடம்பே - உடம்பைப் போற்றுதலே - எல்லாம் - சகல செல்வமாம் என மேற்கொண்டு, அதனால் இளைத்துச சோர்வுற்றுத் திரியாமல்

(போற்றித் துதிக்க மனத்தில்) உதிக்கின்றதாகும் (பரத்தை) பரம்பொருளை (உயிர கெட) ஆணவமத்துவம் நீங்க, அழகிய கிண்கிணி, சதங்கை - இவை விதம் விதமாக கீதங்களைச் செய்யும்

* இரண்டு தாமரையனைய திருவடிகளாம் பதத்தை - இனியேனும் பற்றி உய்யும் கருத்தை (எனக்கு) எப்பொழுது தருவாய்!

கோமேதகம் என்ற கதை, சாரங்கம் என்ற வில், நாந்தகம் என்ற வாள், பாஞ்சஜன்யம் என்னும் சங்கம், வலிமை வாய்ந்த சுதர்சனம் என்னும் சக்ராயுதமும் கொண்ட மேகநிறத்துத் திருமாலின் மருகனே!

கருணையும் அஞ்சன மையும் கொண்ட தாமரையனைய கண்களைக் கொண்ட, அழகிய பசிய தினைப்புனத்திருந்த கரும்பு போல் இனிய வள்ளியின் மணவாளனே!

மன்மதனுக்க யமனயிருந்த (எரித்து அழித்த) சிவபெருமானுக்குக் குழந்தையாகத் தாமரையிற பிறந்து விளங்கின குமரேசனே!

மதுராந்தகத்தில் வட திருச்சிற்றம்பலம் என்னும் கோயிலில் அமர்ந்து விளங்கும் பெருமானே!

(293) பூர்விகல்யாணி (15) (4) [1+½+½+½+2 / ½+½+½+3] 293 (91)

சயில அங்கனைககு உருகி இடப பக

கம் கொடுத்த கம்பர் — வெகு சாரி

சதி தாண்டவத்தா சடை இடத்துக்

கங்கை வைத்த நம்பர் — உரை மானச

செயல மாண்டு, சித்தம அவிழ, நித்தத்

த்வம் பெறப் பகர்ந்த — உபதேசம்

சிறியேன் தனக்கும உரை செயிற் சற

றுங் குருத்துவம் கு — றையு மோதாண்

அயில் வாங்கி எற்றி உததியிற கொக

கன் தனைப் பிளந்து — கரர் வாழ

அகில அண்ட முற்றும் நொடியினிற் சற

றும் திறற் ப்ரசண்ட — முகு நீல

மயில தாண்ட விட்டு, முது குலப் பொற

குன்று இடித்த சங்க்ராம — விநோதா

மதுராந்தகத்து வடதிருச சிற

றம்பலத்து அமர்ந்த — பெருமானே

— மதுரை 294

(294) நீலாம்பரி (16) மு¾. ஆதி-2 களை

ஆனை முகவற்கு நேர இளைய பதத

அறுமுக வித்தக — அமரேசா

293

மலைமகளாகிய பார்வதியின் (பக்திக்கு) உருகி (தமது) இடது பாகத்தைத்
தந்தருளிய ஏகம்பவாணர், பல வகையாகச் சுழன்று
தாள ஒத்துக்களைக் கொண்ட ஆடலை உடையவர், சடையிடத்திலே கங்கை
வைத்துள்ள, ஆன்மாக்களால் விரும்பப்படுகின்ற சிவபெருமானது வாக்கு அழியவு
செயல் அழியவும், மனம் அழியவும். (நித்ததவம) என்னும் உளதாம் தன்மை
பெற - நீ செய்த உபதேசத்தை
சிறியவனாகிய எனக்கும் உபதேசித்தருளினால் உனது குருதத்துவம் -
குருமூர்த்தியாம் பதவி குறைந்து போகுமா என்ன?
வேலாயுதத்தை எடுத்துச் செலுத்திக் கடலிலிருந்த மாமரமாய் நின்ற
சூரனைப் பிளந்து. தேவர்கள் வாழ
சகல அண்டங்களை முழுமையும் ஒரு நொடிப் போதில் சுற்றின வலிமை
வாய்ந்த, கடுமை கொண்ட (அல்லது) மிக்க வேகம் கொண்ட, முழு நீல நிறம் கொண்
மயிலைப் பாய்ந்தோடச் செய்து, வலிமையில் முதிர்ந்து உயர்ந்த கிரவுஞ்ச
மலையைத் துகள் படுத்திய போர் விளையாடலை உடையவனே!
மதுராந்தகத்தில் வடதிருச்சிற்றம்பலம் என்னும் கோயிலில
அமர்ந்து விளங்கும பெருமானே

மதுரை 294

(294)

ஆனைமுகத்தைக் கொண்ட கணபதிக்கு நேராகப் பின் தோன்றிய இளைய
வனும் அன்பனே! ஆறுதிருமுகங்களைக் கொண்ட ஞான சொரூபனே!
தேவர்களுக்கு அரசாம் தலைவனே!

ஆதி அரனுக்கும வேத முதல் வற்கும
ஆரணமும உரைதத — குருநாதா
தானவா குலததை வான கொடு துணித்த
சால சதுர் மிகுத்த — திறல் வீரா
தாள் இணைகள் உறறு மேவிய பதத்தில்
வாழ்வொடு சிறகக — அருள்வாயே
வான எழு புவிக்கும் மாலும் அயனுக்கும்
யாவர் ஒருவர்க்கும் — அறியாத
மா மதுரை சொக்கா மாது உமை களிக்க
மா மயில் நடத்தும் — முருகோனே
தேன் எழு புனத்தில மான விழி குறத்தி
சேர மருவுற — திரள் தோளா

தேவர்கள கருத்தில் மேவிய பயத்தை
வேல் கொடு தணித்த — பெருமாளே

---

(295) மோகனம் 295 (7) 1½ 0 ஏ 1+½+½ +3

கலை மேவு ஞானப் பிரகாச - கடலாடு ஆசைக் கடலேறி
பல மாய வாதிற் பிறழாதே - பதிஞான வாழ்வைத் தருவாயே

மலை மேவு மாயக் குறமாதின் - மனமேவு வாலக் குமரேசா

சிலை வேட்சேவற் கொடியோனே - திருவாணி கூடற் பெருமானே.

முதலவராம் சிவபெருமானுக்கும், வேதத் தலைவனாம் பிரமனுக்கும் (92)
வேதப்பொருள் உபதேசித்த குருநாதனே!
அசுரர் குலத்தை வாள் கொண்டு வெட்டி அழித்த (சதுர் சால் மிகுந்த)
சாமர்த்தியம் நிறைந்து மிகுந்துள்ள பராக்கிரமம் வாய்ந்த வீரனே!
உனது திருவடிகள் இரண்டையும் தியானித்துப் பொருந்துதலைக் கொண்ட
பதவியில், நல வாழ்வுடன் (நான்) விளங்கும்படி அருள் புரிவாயே
விண்ணுலகம் ஆதிய எழுவகைப்பட்ட உலகத்தினர்க்கும், திருமாலுக்கும்
பிரமனுக்கும் வேறு எவர்க்கும் அறிய முடியாத
சிறந்த மதுரைத் தலத்துச் சொக்கேசரும், மாது பார்வதியும் மகிழ்ச்சி
யுறும்படி, அழகிய மயிலைச் செலுத்தி நடத்தும் முருகனே!
தேன் உண்டாகும் வள்ளிமலைக் காட்டில், மான் போலும் விழிகளைக்
கொண்ட குறத்தி வள்ளி (உன்னைச்) சேரும்படி (அவளிடம்) அணுகிய
திரண்ட தோள்களை உடையவனே.
தேவர்களின் உள்ளத்தில் இருந்த பயத்தை வேலாயுதம்
கொண்டு (சூரனை அழித்து) நீக்கிய பெருமாளே

295

கலைகள் எல்லாம் தன்னுள் அடக்கியுள்ள ஞான முனியான — கடலி
னையே திளைத்துக் குளித்து மூவாசை எனப்படும் கடலைத் தாண்டிக் கடந்து
பலதத்தான சமய வாதங்களில் மாறுபடக் கிடக்காமல் — கடவுளைப்
பற்றிய ஞான வாழ்வை — சிவஞான வாழ்வை — தந்தருள்வாயே
வள்ளிமலையில் இருந்த வசீகரத் தோற்றத்தைக் கொண்ட குறப்பெண் வள்ளியின்
மனத்திலே வீற்றிருக்கும் இளங் குமரேசனே
வில்லேந்திய வேடமாய் விளங்கினவனே! சேவற் கொடியோனே! இலக்குமியும்
சரஸ்வதியும் (செல்வமும் கல்வியும்) விளங்கும் மதுரை நகர்ப் பெருமாளே.

296 (93)

ஷண்முகப்ரியா (4½) ரூ (3+½)

நீதத துவமாகி நேமத் துணையாகி

பூதத் தயவான போதைத் தருவாயே

நாதத் தொனியோனே ஞானக் கடலோனே

கோது அற்ற (அ)முதானே கூடற பெருமானே

297

தேவமனோஹரி (8) ரூ ஆதி

பரவு, நெடும் கதிர் உலகில் விரும்பிய
பவனி வரும்படி அதனாலே
பகர வணங்கரும நிகர விளங்கிய
இருளை விடிந்தது நிலவாலே

வரையினில் எங்கணும் உலவி நிறைந்தது
வரிசை தரும் பதம் அதுபாடி
வளமொடு செந்தமிழ் உரை செய, அன்பரும
மகிழ, வரங்களும் அருளவாயே

அரஹர சுந்தர அறுமுக என்று உன்னி
அடியார் பணிந்திட மகிழ்வோனே

நீ
த்தவம் - நீதித்தன்மை கொண்டதாய் (அல) நீதம்-நீதி. துவம்-அசையாத நி
நீத்து
யில் நிலை பெற்றதாய், நியமமான - சீரிய ஒழுக்கத்தில் ஒழுகுவதற்குத்
துணை
ணை செய்வதாய
உயி
ர வர்க்கங்களின் மீது கருணை செய்வதாய விளங்கும் முதறிவை -
பெரி
ரிய ஞானத்தைத் தந்தருள்வாயே
நாத
த வடிவாக விளங்குபவனே (ஒலியும் ஓசையுமாய விளங்குபவனே)
ஞான
ன அமுதகிரமே!
குறை
றம் இலலாத அமுதம் அனையவனே! மதுரையில் எழுந்தருளியுள்ள பெருமானே,

---

297

எல்லாராலும் போறறப்படும, நீண்ட கிரணங்களை உடைய சூரியன்,
உலகி
கெல்லாம் விருமபும்படி உலா வரும் காடசி தானே (இது) இந்தத திருவடி
என
று சிறப்பித்தும், (உலா வரும் தனமையினால)
செ
சால்லக் கூடிய வளபபங்களுக்கெல்லாம ஒபபாக விளஙகுகினறதும
இரு
ளைப் போக்கி உதயமாவதுமான நிலவொளிதானே இது - இந்தத் திருவடி
என
று சிறப்பித்தும்,
மலை
யிடங்களில எவவிடத்தும உலாவி நிறைநது, (வரிசை) ஒழுங்கான
காட
-சியைத் தருகின்ற உனது திருவடிகளை (நான்) பாடி
செ
சால் பொருள) வளம் கூடிய, செழுமை வளத்துடன் செநதமிழப பாவால
உன
னைப போற்றிப் புகழவதறகும், அபபாடலகளைக் கேடடு அனபாகள மகிழ
வும
, வரங்களைத தந்து அருளபுரிவாயே!
ஹர
ஹர ஹர! அழக! ஆறுமுகததவனே! எனறெலலாம (உனனி) தியானித்து
அடி
யாாகள உனனை வணஙக மகிழ்சசி கொளபவனே!

அசல நெடும கொடி அமை உமை தன் சுத
குறமகள் இங்கித — மணவாளா

கருத அரு(ம்) திண்புய, சரவண, குங்கும
களபம் அணிந்திடும் — அணி மார்பா
கனக மிகும் பதி மதுரை வளம் பதி
அதனில் வளர்ந்து அருள் — பெருமாளே

298

மாயாபுரி

(8) பருது வராளி (8½) (—) (2+1½+2+3)

சிகரம அருந்த வாழ்வது — சிவஞானம

சிதறி அலைந்து போவது — செயல் ஆசை

மகர நெருங்க வீழ்வது — மகமாய

மருவி, நினைந்திடா அருள — புரிவாயே

அகர நெருங்கின் ஆமயம் — உறவாகி

அவசமொடும் கையாரொடும் — முனை ஏகி

(இமய) மலையில் தோன்றிய பெருமை வாய்ந்த கொடியனைய (அம்மை) உலகன்னையாகிய உமையின் திருக்குமாரனே! குறமகள் வள்ளிக்கு இனிமை வாய்ந்த மணவாளனே!
நினைப்பதற்கு அரிய திணிய - வலிமையுடைய - தோள்களையுடையவனே சீறுணவவனே! செருசாந்துக கலவை அணிந்துள்ள அழகிய மார்பனே!
(பொன்தெனி) பொன் மாடங்கள் நிரம்பிய நகரமாகிய மதுரை என்னும் செழிப்புள்ள தலத்தில் விளங்கி வீற்றிருந்தருளும் பெருமானே

மாயாபுரி 298

"சிவாயநம என்னும் பஞ்சாக்ஷரத்தில் உள்ள "சி" என்னும் சாரமதுவை (அருந்த) உச்சரிப்பதனால் (வாழ்வது) உண்டாவது சிவஞானமாம்
(அத்தகைய உச்சரிப்பால) சிதறுண்டு அலைந்து அழிந்து போவது (மனம், வாக்கு, காயம் இவைகளின) செயலும், ஆசைகளும் (மோன ஞானம். நிராசை, உண்டாகும் என்றபடி)
"ம" என்னும் எழுத்து நெருங்குவதால் வந்து கூடுவது தான மகா மாயம - பெரிய மாயை-; (ஆதலால்)
+உன்னை (மருவி) தியானித்து, அதன் பயனாக (நினைந்திடா) நினைப்பு மறப்பு அற்ற நிலையை அருள் புரிவாயே
(அகரம் = வீதி) மகேந்திரபுரியின் வீதிகளில் நெருங்கி வந்தால், (ஆமயம்) நோய்க்கு- வருத்தத்துக்கு (உறவாகி) இடம் பெற்று
(அவசமொடும) மயக்கத்துடனும், (கையாறொடும) தன் செயல அற்றும் (முனம்) தானது அரசாட்சிக காலத்தில் (ஏகி) சென்று

ககனம் இசைந்த சூரியர் புக, மணவை

கருணை பொழிந்து மேவிய பெருமானே

<u>வடதிருமுல்லைவாயில</u>

<u>மோகனம்</u> (6½) (–) <u>(1+1½+4)</u>

அணி செவ்வியார், திரை சூழ புவி,
தனம், திவ்வியே கரையேறிட
அறிவில்லியாம் அடியேன் இடர் அது தீர
அருள் வல்லையோ, நெடுநாள் இ(ன)னம்
இருள் இல்லிலே இருமோ உனது
அருள இல்லையோ, இனமானவை அறியேனே

குண வில்லதா மக மேரினை
அணி செலவி ஆய் அருசைவ
குரு, வல்ல மா தவமே பெறு குண சாத
குடில் இல்லமே தரு நாள் எது,
மொழி. நல்ல யோகவரே பணி,
குண வல்லவா, சிவனே, சிவ குரு நாதா

ஆ
காயத்திற் பொருநதியிருந்த ஆதித்தர் பன்னிருவரும் (புக)
உன
ர்னிடத்திற் சரணபுக
அவ
பர்களுக்குக் கருணைபாலித்து -(சூர சம்ஹாரம் செய்து, அவர்களுக்கு
கரு
ணை பொதிந்து (மாயை மேவிய பெருமானே) மாயாபுரியில்
வீற்
)றிருக்கும் பெருமானே.

<u>வடதிருமுல்லைவாயில்</u>

அழகிய செம்மை வாய்ந்த மாதர்கள, கடல் சூழ்ந்த பூமி, பொன -
ஆண
பெண், மண, பொன் என்னும் மூவாசைகளை- கடந்தே கரையேறிட,
அறி
விவ்லாதவனாகிய அடியேனுடைய துயர் தீருவதற்கு

தி
ருவருளுக்கு வலிமையில்லையோ? நெடுங்காலத்துக்குக், இன்னமும் என்னை
தி
ள வீடதிலே செலுத்து விடுமோ? — கூடமான இருள் வீடாகிய பிறவி
கனி
லே கொண்டு விடுமோ — உனது திருவருள் என் மீது இல்லையோ?
உன
னுடைய சம்பந்தப்பட்ட அடியார் கூட்டத்தை அறிந்தேனில்லையே! (அல்லது)
தக
்க நல்லனவுகளை - திருவருளின் பாகுபாடு இனனவையென்று -அறியேனே
தீர
ான வில்லாக மகா மேருவை தரித்த செல்வி, தாய், பார்வதி தேவி
யுடன
ன் கூடிய அணணாமலையார்க்கு குருவாக வந்தவனே! (வலு) திண்ணிய
பெரி
ய தவநிலையையே பெரும்படியான நறகுணத்தோடு கூடிய பிறப்பிற் கிடைத்த
உ
டலாகிய வீட்டை (அடியேனுக்கு) நீ தருகின்ற நாள எது? (எப்போது தருவாய்)
கூற
ுவாயாக! நல்ல யோகிகள பணிகின்ற நற்குணம் வாய்ந்தவனே!
மாங
்கல சொரூபமானவனே! சிவனுக்கு குருமூர்த்தியே!

பணி கொள்ளி, மா கண பூதமொடு
அமர கள்ளி தானக நாடக
பரமெல்லியார் பரமேசுரி — தரு கோவே

படர் அலலி மா மலர் பாணம் அது
உடை விலலி, மா மதனார் அ(ன்)ன
பரி செல்வியார் மருகா, சுர — முருகேசா

மணம ஒல்லியாகி நகா கண
தன வலலி, மோகனமோடு அமர்
மகிழ் தில்லை மா நடம் ஆடினா — அருள் பாலா

மரு மல்லி மா வனம் நீடிய
பொழில் மெல்லி கா வன மாடு அமை
வட முல்லை வாயிலின் மேவிய — பெருமானே

<u>வங்கா</u> 300

300 <u>ரேவதி</u> (8) (ம) <u>ஆதி</u>

அரி அயன அறியாதவா எரி புரம் மு
ணது புக நகை ஒவிய — நாதர்
அவிர சடைமிசை ஓா வனிதையர் பதி, சீ
றழலைய மழ நோ — பிடி நாதா

பாம்புகளை ஆபரணமாகக் கொண்டவள்; பெரிய கணங்களான பூதங்களொடு அமர்ந்துள்ள (கள்ளி) திருடி; காட்டில் (சிவனுடன்) நடனம் ஆடுகின்ற மேன்மையும் மென்மையும் உடையவள், பரமேசுரி பெற்ற தலைவனே!

நீரிற் படரும் அலரி, தாமரை. நீலோற்பலம் ஆகிய சிறந்த மலர்ப் பாணங்களைக் கொண்டவனும், (கரும்பு) வில்லை உடையவனும் ஆகிய அழகிய மன்மதனுடைய தாய (பரி) பெருமை வாய்ந்த இலக்குமி தேவியின் மருகனே! தெய்வ முருகேசனே! (தேவர்கட்கு அருள்புரியும் முருகனே)

திருமணம் விரைவிற் செய்து கொண்டு, (கன தன நக வல்லி) பருத்த தனங்களை உடைய (நக வல்லி) மலைக்கொடியாம் பார்வதி, வசீகரத்துடன் அமர்ந்து மகிழும், தில்லையில் பெரிய நடனத்தை ஆடி அருளினவர் அருளிய குழந்தையே!

வாசனையுள்ள மல்லிகை பெருங்காடாக வளர்ந்துள்ள சோலையும், மென்மை வாய்ந்த (கா) பூந்தோட்டங்களும, (வனம்) நீர் நிலைகளும் (மாடு அமை) பக்கங்களிற் சூழ்ந்து அமைந்துள்ள வட திருமுல்லை வாயிலில் வீற்றிருக்கும் பெருமானே.

வருகா 300

(300) திருமாலாலும், பிரமனாலும் காணமுடியாதவர், நெருப்பு புரம் மூன்றிலும் புகும்படியாகத் தமது சிரிப்பை ஏவிய தலைவர் – புரம் மூன்றையும் சிரித்து எரித்த தலைவர்.

விளங்கும் சடை மீது ஒரு மாது கங்கையைக் கொண்டவர், கடவுள் (அல்லது) கங்கையாம மாதின் தலைவர் – காய்ந்து வந்த நெருப்பையும், மழுவையும் தோளக் கையில் ஏந்தியுள்ள தலைவர்

வரை மகள் ஒரு கூறு உடையவா, மதன
ஆகமும் விழ விழி ஏவிய நாதா
மன மகிழ் குமரா என உனது இரு தாள
மலர் அடி தொழுமாறு அருள்வாயே
அரு வரை இரு கூறிட ஒரு மயில் மேல
அவனியை வலமாய வருவோனே
அமரர்கள் இகல நீடு அசுரர்கள சிரமேல
அயில தனை விசையாய விடுவோனே
வரிசையொடு ஒரு மா தினை தரு வனமே
மருவி வாழ் குறமாது அணைவேடா
மலைகளில மகிழ்வாய் மருவி நல் வடகூர
வரு தவ முநிவோர் பெருமானே.'

வயலூர் 301

(301) கேதாரம் (6) (-) 014

அரி மருகோனே நமோ என்று, அறுதி இலானே நமோ என்று
அறுமுக வேளே நமோ என்று உன பாதம
அரகர சேயே நமோ என்று, இமையவர் வாழ்வே நமோ என்று
அருண சொரூப நமோ என்று - உனது ஆசை
பரிபுர பாதா, சுரேசன் தரு மகள நாதா, அராவின
பகைமயில் வேலாயுதா, ஆடம்பர, நாளும்
பகர்தல் இலாதான், ஏதும் சிறிது அறியா ஏழை, நான, உன
பதி பசு பாச உபதேசம் பெறவேணும்

மகள் பார்வதியை ஒரு பாகத்தில் உடையவர், மன்மதனுடைய உடலும்
எரிபட்டு விழ, கண்ணினின்றும் தீயைச் செலுத்தின தலைவர்
மனம் மகிழும் குமரனே! என்று உன்னுடைய இரண்டு தாளாகிய
மலர்ப் பாதங்களை தொழும்படியாக அருள் புரிவாயே!
ஆற்றல் வாய்ந்த கிரவுஞ்ச கிரி இரண்டு கூறுகப் பிளவுபடும்படி (செய்து)
தீப்பற்ற மயில் மேல் ஏறி உலகை வலமாக வந்தவனே!
தேவர்களோடு பகைமை பூண்டிருந்த பெரிய அசுரர்களின் தலைகள் மீது
வேலாயுதத்தை வேகத்தோடு செலுத்தினவனே!
வரிசையோடு நல்ல நிலையில் ஒப்பற்ற சிறந்த தினை வளரும் காட்டுக்குச்
சென்று ஒப்பற்ற குறப்பெண் வள்ளியை அணைந்த வேடனே!
மலையிடங்களிற் ப்ரீதி கொண்டவனே! (மனம்) பொருந்தி நல்ல
வடுகூர் எனனும் தலத்தில் வருகின்ற தவ முனிவர்களின் பெருமானே

வயலூர் 301

திருமாலின் மருகனே உன்னை வணங்குகின்றேன என்றும், முடிவு (அந்தம்)
இல்லாதவனே உன்னை வணங்குகின்றேன் என்றும், ஆறுமுக வேளே உன்னை
வணங்குகின்றேன எனறும், உனனுடைய திருவடியை
ஹர ஹர! சேயே! நமோ எனறும். தேவர்களின் செல்வமே நமோ எனறும்
செந்நிறச் சொரூபனே நமோ என்றும துதிதது வணங்க எனக்கு ஆசை இருக்கின்றது
தீ
வலம் பணிநத பாதனே! தேவேந்திரன் தரும மகள் தேவசேனையின் கணவனே! பாம்பு
கொப்
பகையான மயில வாகனததையும் வேலாயுதத்தையும் உடைய கோலாகலனே! ஒருநாளும்
நான் நினைதது சொலலுதல் இலலாத - துதி சொலலாத - உன் திருவடியை
சிறிதளவேனும் - அறியாத, ஏழையாகிய (அறிவிலலாதவனாகிய, நான்

கரதல துவாயுதா, முன் சலபதி போல் அரவாரம்
கடின் சுராயாண சாடுனடியும் ஆடக்
கரியரி மேல் ஏறுவானும், செய செய சேனபதி என்
கனமினை தான ஏறியே, அஞ்சிய நூரன்
குரல் விட, நாய் பேய்கள பூதம், கழுகுகள் கோமாயு காகம்
குடல் கொளவே பூசவாடும் பல தோளா

குடதிசை வார் ஆழி போலும் பபர் நதி காவேரி சூழும்
குளிர் வயலூர் அர மேவும் பெருமானே.

---

(302) பேகடா (8) 302 (ம) ஆதி

என்னை பிறக்கவும், என்னை இறக்கவும்,
என்னை துதிக்கவும், கணகளாலே
என்னை அழைக்கவும், என்னை நடக்கவும்,
என்னை இருக்கவும் பெண்டீர் வீடு
என்னை சுகிக்கவும், என்னை முசிக்கவும்
என்னை சலிக்கவும் தொந்த நோயை

என்னை எரிக்கவும் என்னை நினைக்கவும்,
என்னை தரிக்கவும் இங்கு நான் ஆர்

உனது திருவாயால் பதி, பசு, பாசம் எனப்படும் திரிபதார்த்தங்களாகிய நித்தியப் பொருள்களின் இலக்கணங்களைப் பற்றிய உபதேச மொழிகளைப் பெறவேண்டும்

கையிற் சூலாயுதம் கொண்டவனே! முன்பு கடல் போல ஆரவாரம் - பேரொலியும் - சுராபானம் குடித்தலும் உடைய சாமுண்டி (துர்க்கை) ஆட

யானையாகிய (பரி) வாகனத்தில் ஏறி வருகின்ற இந்திரனும், ஜெய ஜெய சேனாபதியே என்று ஆரவாரிக்க, போர்க்களத்தில் தேவரீர் சென்று, அசுரர்களை (அழுகைக்) கூச்சலிடவும், நாயும், பேய்களும், பூதங்களும், கழுகுகளும், நரியும், காக்கையும் அசுரருடைய குடலைக் கீறித் தின்னவும் போர் செய்த வ தோள்களைக் கொண்டவனே!

கிழக்குத் திசையில் இருந்து, பெரிய கடல் போலப் பரவி வருகின்ற காவிரி நதி சூழ்ந்துள்ள குளிர்ந்த வயலூரில் உள்ளம் நிறைந்து வாழ்கின்ற பெருமானே

302

(302)

என் திறத்தால் நான் பிறப்பதற்கும், என் திறத்தால் நான் இறப்பதற்கும் என் திறத்தால் நான் துதிப்பதற்கும், என் கண் கொண்டு

ஒருவரைப் பார்த்து நான் அழைப்பதற்கும், என் கால் கொண்டு நான் நடப்பதற்கும், என் திறம் கொண்டு நான் ஓரிடத்தில் இருப்பதற்கும், மாதர்கள், வீடுகள் (இவற்றை) நான் அனுபவித்துச் சுகிப்பதற்கும், (இது வேண்டும். அது வேண்டும் என்று நான் இச்சித்து மெலிவதற்கும், இது போதும் என்று நான் அலுப்பு உறுவதற்கும் (சோர்வு அடைவதற்கும்) வினைச் சேர்க்கையால் வரும் நோய்களை

நான் எரித்துத் தள்ளுவதற்கும், பல நினைவுகளையும் நான் நினைப்பதற்கும், துன்ப துன்பங்களை தாங்குவதற்கும். இங்கே எனக்கு என்ன திறம் - உரிமை - சுதந்திரம் உண்டு - ஒன்றும் இல்லை என்றபடி - எல்லாம் தேவரீருடைய செயலே!

கல் நார உரித்த என மன்று, எனக்கு நல்
கர்ண அமிர்த பதம் தந்த கோவே

கல்லார் மனத்துடன நிலவா மனத்தவ,
கண்ணடியிற் றடம் கண்ட வேலா

மன்றன தக்கனை முன்றலை முடித்தவ
வன் வாளியிற் கொளும் தங்கருபன்

மன்று, குறத்தியின் மன்று, வயற்பதி
மன்று, மூவர்க்கு ஒரு தம்பிரானே.

<u>கேதாரம்</u> (7½) (ம) ½+2+4 303

குருதி, கிருமிகள், சலம், மலம், மயிர், தசை,
மருவும் உருவமும் அவம் அவம், அழகொடு
குலவு பலவணி பரிமளம் அறுசுவை மடை, பாயல்
குளிரில அறை அகம் இவைகளும் அவம அவம
மனைவி. மகவு. அ(ன)னை, அநுசர்கள், முறை முறை
குனகு கிளைஞர்கள் இவர்களும் அவம அவம் ஒரு நாலு
சுருதி வழிமொழி சிவகலை அலது இனி
உலக கலைகளும அவம் அவம இலகிய
தொலைவில் இவ உனை நினைபவர் உறவு அலது இனி அயலாராய

கல்லினின்றும் நார் உரிபபது போல (என நெஞசக் கன கலலைக கசியப்
ன்னின) அரசே! அடியேனுக்கு நலல, செவிக்கு அமிர்தம் போன்ற,
தம) உபதேச மொழியை அருளின (உபதேசித்த) தலைவனே!
உன்னை கற்றறியாதார நெஞ்சங்களில் நிற்பது என்பதையே நினைக்காத
னத்தை உடையவனே! கண்ணாடி போல மிகத் தெளிவு உள்ள குடம்) நீர்
நிலையை வேல் கொண்டு கண்டவனே!
தேவா முதலியோாக்குத் தலைமை பெறறு விளங்கிய தேவப்பிராஜ பதியை
ன்பு, அவனுடைய மகுடத்துடன கூடிய தலையை, கொடுமை வாய்ந்த
ம்பிறை கொய்த தங்க சொருபனை சிவனுக்கு
தலைவனே! குறத்தி வள்ளியின தலைவனே! வயலூர என்னும் தலத்தில்
எழுந்தருளியுள்ள தலைவனே, மும்மூர்த்திகளுக்கும் ஒப்பற்ற தம்பிரானே!

303

(303) ரத்தம், புழுக்கள், சலம், மலம், மயிர், மாமிசம்-சதை இவை பொருந்திய
உருவமாம் இவ்வுடல் எடுததது போதும், போதும், அழகொடு விளங்கும்
பல விதமான ஆபரணங்களும், நறுமணமுள்ளனவும், அறுவித சுவைகள்
உடியுளனவுமான சோறு, படுக்கை
குளிருக்கு அடக்கமான அறைகளை உடைய வீடு - இவைகளும் போதும் போதும்
மனைவி, குழந்தைகள், தாயார, கூடப்பிறந்தவாகள, உறவு முறை கூறிக்கொஞ்
மிக குலவும் சுற்றததினர, இவர்களும போதும போதும, ஒரு நானகு
வேதங்களின் மாாக்கங்களை எடுத்துக் கூறும் சைவ சித்தாந்த நூலகள
தவிர வேறு உலக சமபநதமான நூல்களை ஓதுதலும போதும போதும,
விளங்கி நிற்பவனும் அழிவிலாதவனுமான உனனை நினைப்பவாகளுடைய
நடபுத் தவிர இனி அயலாாகளிடததே

கழல்வது இனிது என வசமுடன் வழிபடும்
உறவும் அவம் அலம், அருள் அலை கடல கழி
துறைசெல அறிவினை எனது உளம் மகிழ்வுற அருளவாயே

விருது முரசுகள் மொகு மொகு மொகு என
முகுற, ககபதி முதில திகழ் முகடு அதில்
விகட இறகுகள் பறையிட, அலகைகள் நடமாட
விபுதர் அர கர சிவசிவ சரண் என
விரவு கதிர முதிர இமகரன் வலம வர
வினை கொள் நிசிசரர் பொடிபட அடல் செயும் வடிவேலா

மருது நெறு நெறு நெறு என முறிபட
உருளும் உரலொடு தவழ் அரி மருக, செவ
வனச மலர் சுனை, புலி துழை முழை, உடைய் விராலி
மலையில உறைதிற அறுமுக, குருபர,
கயலு மயிலையும் மகரமும் உகள, செநெல
வயலி நகரியில் இறையவ, அருள தரு பெருமானே

தர்பாரி கானடா (8) 304 (ஸ) ஆதி

தாமரையின் மட்டு வாச மலர் உத்த
தாள் இணை நினைப்பு இல் அடியேனை

சுற்றித் திரிவது நல்லது என்று அவர்கள் வசப்பட்டு அவர்களைப் பின் பற்றி வழிபடுகின்ற நடப்பும் போதும் போதும், உனது திருவருள் அலைகளை வீசும் கடலின் காவகளின் (துறை) வழியில் செல்லும அறிவை என்னுடைய உள்ளம் மகிழ்ச்சி பெற அருள் புரிவாயே

வெற்றிச் சின்ன முரசுகள் மொகு மொகு மொகு என்று (கூற) பேரொலி செய்ய, கருடன் மேகம் விளங்கும் உச்சியில் (ஆகாயத்தில்) அகன்ற தனது இறகுகைகளைக் கொண்டு வட்டமிட, பேய்கள் நடம் ஆட தேவர்கள் ஹர ஹர, சிவ சிவ சரணம் என்று ஒலி எழுப்ப, பொருந்தும் சூரியனும், (இமய முதிர கரன்) பனி-குளிர் நிறைந்த கிரணங்களை உடைய சந்திரனும் வலம் வர. (வினை) தீச் செயல்களைக் கொண்ட அசுரர்கள் பொடிபட்டழியப் போர் செய்த கூரிய வேலை உடையவனே!

மருத மரம் நெறு நெறு நெறு என்று முறியும்படி, உருண்டு சென்ற உரலுடனே தவழ்ந்து சென்ற கண்ணபிரான்-திருமாலின்- மருகனே! செந்தாமரை மலருகின்ற சுனையும், புலி நுழைகின்ற குகையும் கொண்ட விராலி மலையில் உறைகின்ற ஆறுமுகனே! குருபரனே! கயல் மீன்களும், மயில் மீன்களும், மகர மீன்களும் (உகள்) தாவித் திரியும் செந்நெல் வயல்களைக் கொண்ட வயலூர் என்னும் திருப்பதியில் இறைவனே! திருவருள் பாலிக்கும் பெருமானே! ..

304

(304)

தாமரையின் நிரம்ப நறுமணமுள்ள மலருக்கு ஒப்பான (உனது) திருவடிகள் இரண்டின் நினைப்பே இல்லாத அடியேனை

தாது அவிழ கடுக்கை, நாக மகிழ், கற்ப
    தாரு என செத்திய விராலி
மா மலையில நிறயம் நீ கருதி உற்று
    வா என அழைத்து என் மனது ஆசை
மாசினை அறுத்து, ஞான அமுது அளித்த
    வாரம் இனி நித்தம் மறவேனே
காமனை எரித்த தீ நயன நெற்றி
    காதிய சுவர்க்க நதி வேணி

காணில் உறை பூறில ஆடு பணி கிடட
    காது உடைய அப்பா குருநாதா
சோமனொடு அருக்கன மீன உலவு மிக்க
    சோலை புடை சுற்று மயலூரா
சூடிய தடக்கை வேல் கொடு விடுத்து
    சூர் தலை துணித்த பெருமானே

வயிரவிவனம் 305

(305) ஸ்ரீரஞ்சனி ... (5½) ... ⌒ 2+2+½
அருவரை எடுத்த வீரன, நெரிபட, விரலதன ஊன்றும்
    அரன் இடம் இருக்கும் ஆயி அருள்வோனே
அலைகடல அடைத்த ராமன, மிக மனம் மகிழ்சசி கூரும,
    அணி மயில நடத்தும் ஆசை மருகோனே

மகரந்தப்பொடி விரியும் கொன்றை, சுரபுன்னை, மகிழமரம் இவைகள்
கற்பக விருக்ஷங்கள் எனனும்படியாக நிறைந்துள்ள விராலி என்கின்ற
பெருமை மிகுந்த மலையில யாம வீற்றிருக்கின்றோம், நீ (அத்தலத்தை) நினைப்
பில வைத்து வருவாயாக" எனக் கூறி அழைத்து என மனத்திலுள்ள ஆசைகள்
குற்றங்கள் இவைகளை ஒழித்து, ஞான அமுதப் பிரசாதத்தை வழங்கிய
உனது (பாரம) அனனை இனி எந்நாளும் மறக்க மாட்டேன்.

மன்மதனை எரித்த நெருப்புக் கண்ணையுடைய நெற்றியையும், (காதிய)
எல்லாவற்றையும் அழிக்க வல்லதாயப் பாய்ந்து வந்த ஆகாய கங்கையைச்
சூடியுள்ள சடையையும்
காட்டில் இருக்கும் புற்றில் படமெடுத் தாடுகின்ற பாம்பை அணிந்துள்ள காதையும்
கொண்ட (அப்பா) சிவபெருமானுக்குக் குருநாதனே!

சந்திரனும், சூரியனும் நக்ஷத்திரங்களும் உலவுகின்ற (அளவுக்கு) உயர்ந்த
சோலை, பக்கங்களில் சுற்றியுள்ள, வயலூரானே!

(தடக்கை சூடிய) அகன்ற திருக்கரத்தில் ஏந்திய வேல் கொண்டு- அதைச்
செலுத்தி- சூரனது தலையை வெட்டித் துணித்த பெருமானே

வயிரவி வனம் 305

5) அருமை வாய்ந்த (கயிலை) மலையை அசைத்து எடுக்க முயன்ற வீரனை
ராவணனை நெரியும்படி (தமது) விரல்களை ஊன்றிய சிவபெருமானது இடது
பாகத்தில் இருக்கும் தாய பார்வதி அருளிய குமாரனே!

அலை வீசும் கடலை அணையிட்டு அடைத்த ஸ்ரீராமன், மிகவும் மன மகிழ்ச்சி
கொள்ளும், அழகிய மயிலை நடத்துகின்ற, அன்பு நிறைந்த மருகனே! (அழகிய
மயில் வாகனமாகக் கொண்டு (ஆசை) எட்டுத் திக்கிலும் நடத்தின)

பருதியின் ஒளிக் கண் வீறும் அறுமுக, நிரைத்த தோள் பன் (102)
னிரு கர, மிகுத்த பார முருகா, நின்

பத மலர் உளத்தில நாளும் நினைவுறு கருத்தா தாள்கள்
பணியவும் எனக்கு ஞானம் அருள்வாயே

சுருதிகள் உரைதத வேதன, உரை மொழி தனக்குள் ஆதி
சொலு என உரைத்த ஞான குருநாதா

சுரர்பதி தழைத்து வாழ, அமர் சிறை அனைத்து மீள,
துணிபட அரக்கர் மாள விடும் வேலா

மரு மலர் மணக்கும், வாச நிறை தரு, தருக்கள் சூழும்
வயல் புடை கிடக்கும் நீல மலர் வாவி

வளம் உறு தடத்திடை சரஸ்வதி நதிக்கண் வீறு
வயிரவி வனத்தில் மேவு பெருமாளே

வாலிகொண்டபுரம் 306.

(306) மத்யமாவதி (32) ஆதி 4களை (ல) 1½+1½+1

ஈ, எறும்பு நரி, நாய் கணம், கழுகு,
காகம் உண்ப உடலே சுமந்து இது
ஏல்வது என்று மதமே மொழிந்து மத உம்பல் போலே

சூரியனது ஒளி தன்னிடத்தே விளங்கும் முகங்கள் ஆறு உடையவனே!
வரிசையாயுள்ள தோளும் கரமும் பன்னிரண்டு கொண்டவனே!
மிக்க (பாரம்) பெருமை வாய்ந்த முருகனே! உனது
திருவடி மலரை உள்ளத்தில் நாளும் நினைத்துத் தொழுதிருக்கும்
கருத்தை உடைய அடியார்களின் தாள்களைப் பணிந்தொழுகவும்
எனக்கு ஞானத்தைத் தந்து அருள்வாயே!
வேதங்களைக் கூறும் பிரமன், உரைக்கத் தொடங்கின சொற்களுக்
குள்ளே முதல் எழுத்தாகிய பிரணவ மந்திரத்தின் பொருளை சொல்லுக
என்று கேட்டருளிய ஞான வடிவாகிய குருநாதனே!
தேவர்களுக்குத் தலைவனை இந்திரன் செழிப்புடன் வாழவும், (இருந்த)
சிறையினின்றும் தேவர்கள் யாவரும் மீளவும். அரக்கர்கள (துணிய)
வெட்டுண்டு இறந்தொழியவும், விடுத்த வேலாயுதத்தை உடையவனே!
வாசனை மலர்கள் மணம் வீசும், நறுமணம் நிறைந்துள்ள மரங்கள்
சூழ்ந்துள்ள வயல்கள் பக்கத்தில் உள்ள நீலோற்பல மலர் மலர்ந்
துள்ள நீர்நிலைகளின்
வனப்பும் வாய்ந்த கரைகளோடு, சரஸ்வதி என்னும் ஆற்றினிடத்தே
விளங்குகின்ற வயிரவிவனம் என்னும் தலத்தில் வீற்றிருக்கும் பெருமாளே

வாலி கொண்ட புரம் 306.

(306)

ஈ, எறும்பு, நரி, நாய், பேய், கழுகு, காகம் இவைகள் உண்ணும்
(இந்த) உடலை நான் சுமந்து. இது தக்கது என்று நினைத்து. ஆணவ
மொழிகளையே பேசி, மத (உம்பல்) யானை போல

ஏதும என்றனிட கோல எனும் பரிவு
மேவி, தம்பி, இது போதும் என்க சிலர்
ஏய தனங்கள், தனி வாகு சிந்தை வச னங்கள் பேசி

சீத தொங்கல் அழகா அணிந்து, மணம்
வீச, மங்கையர்கள் ஆட, வெண் கவரி
சீற, கொம்பு குழல் ஊத, தண்டிகையில் அநதமாக
சேர்கனம் பெரிய வாழ்வு கொண்டு (உ)ழலும்
ஆசை வெந்திட, உன் ஆசை மிஞ்சி சிவ
சேவை கண்டு உனது பாத தொண்டன் என அன்புதாராய்

சூது இருந்த விடா மேயிருணட கிரி
சூரர் வெந்து பொடியாகி மங்கி விழ
சூரியன புரவி தேர் நடந்து நடு பங்கின ஓட

சோதி அநத பிரமா புரநதரனும்
ஆதி அந்த முதல தேவருமே தொழுது
சூழ மனறில நடமாடும் எநதை முதல அனபு கூர
வாது கொணட (அ)வுணா மாள செங்கையில
ஏவி, அண்டா குடி ஏற, விஞ்சையாகள
மாதா, சிந்தை களி கூர நின்று நடனஞ் கொளவோனே

எதுவும் - எல்லாம் என்னுடைய (கோலு) ஆட்சியில் (அடங்கியது) என்றும் வ
பரிவு மேவி) இன்பநிலையை - சுகநிலையை அடைந்து (இந்த நில நிலைத்து
நிற்குமென) நம்பி, (இது போதும்) இந்த ஆடம்பரங்களை போதுமா இவர்க்கு
என்று சிலர் கூறும்படி, பொருந்திய தனங்களை (பொருட் செல்வம்)
துய்யுற்ற (வாகு) அழகிய எண்ணங்கள் கொண்டு பேச்சுகள் பேசி
குளிர்ந்த மாலைகளை அழகாக அணிந்து, நறுமணம் வீச, மங்கையர்கள்
நடனம் ஆட, வெண்சாமரங்களை மேலெழுந்து வீச, ஊதுகொம்பு, புல்லாங்
குழல் முதலியன ஊதிவர, பல்லக்கில் அழகாக
வீற்றிருக்கும் பெருமை கூடிய பெரிய வாழ்வைக் கொண்டு திரியும்
ஆசையானது வெந்து அழிய, உன் மீது அன்பு மிகுந்து, (சிவ) மங்களகர
மான உனது தரிசனத்தைப் பார்த்து உன் திருவடித் தொண்டன்
எனும் படியான அன்பைத் தருவாயாக
வஞ்சனைச் செயல்களுக்கு இருப்பிடமாயிருந்த (விடர்) மலைப் பிளவுகளை
கொண்டிருந்த கிரௌஞ்ச மலை (கிரௌஞ்சமும்), அசுர சூரர்களும் வெந்து
பொடியாகி அழிந்து விழ, சூரியனுடைய குதிரைகள் பூட்டிய தேர் (சூரன்
அட்டிக்காவத்தின் முன் போனது போல) நடந்து-சென்று, (நடு பங்கின்
தூட) நேர வழியில் நடுப்பாகத்தில் ஓட
பொன் ஒளி பொருந்திய அந்தப் பிரமாவும், இந்திரனும், முதல் தேவர் முதல்
கடைத் தேவர் வரை எல்லாத் தேவர்களும் வணங்கித் தாழ்ந்து நிற்க, கனக
சபையில் நடமாடும் எந்தை சிவபிரான் முதலாக யாவரும் அன்பு மிக்கு நிற்க
போருக்கு என்று வாது செய்து வந்த அசுரர்கள் மாள, செவ்விய திருக்கையில்
உள்ள வேலாயுதத்தைச் செலுத்தித் தேவர்கள் பொன்னுலகில் குடியேற வித்தியா
தரர்களின் மாதர்கள் மனம் மிக மகிழ நின்று நடனம் புரிபவனே!

வாசகும்ப தனமானே வந்து தினே
தூவல கொண்ட முருகா, எனும பெரிய
வாலிகொண்டபுரமே அமர்ந்து வளர் தம்பிரானே

விஜய புரம் 307

(307) ஹம்ஸாநந்தி (6) (2) 0/4

குடல,நிணம,என்பு புலால,கமழ குருதி நரம்பு இவை தோல் இடை
குரு குரு எனும்படி மூடிய மல மாசு
குதி கொளும் ஒன்பது வாசலை உடைய குரம்பையை நீர் எழு
குமிழியினுங் கடிதாகியெ அழிமாய
அடலை உடம்பை அவாவியெ அநவரதம் சிவ சாரம் இல்
அவுடதமும் பல யோகமும் முயலா நின்று

அலமரு சிந்தையின அகுலம் அலம் அலம் எனறு இனி யானும் உன
அழகிய தண்டை விடா மலர் அடைவேனே

இடம் அற மண்டு நிசாசரர் அடைய மடிந்து, எழு பூதரம்
இடி பட, இன்ப மகோததி வறிதாக

இமையவரும் சிறை போய், அவர் பதியுள் இலங்க விடா தர,
எழில படம் ஒன்றும் ஒராயிரம் முகமான

நறுமணம் உள்ள, குடம் போன்ற, கொங்கையை உடைய மான் போன்ற வள்ளியிடம் வந்து தினைப்புனத்தைக் காவல் பூண்ட முருகா (எனும்) மதிக்கத் தகக பெரிய வாலிகொண்டபுரம் என்னும் தலத்தில் பொருந்தி வீற்றிருந்து இலகும் தம்பிரானே

விஜயபுரம் 307

(307) குடல, கொழுப்பு, எலும்பு, மாமிசம், பரந்துள்ள ரத்தம், நரம்பு இவைகள் தோலின் இடையே குளு குளு என்று அமையும்படி வைத்து கூட்டப்பட்டுள்ளதும், மலமும் பிற அழுக்குகளும்

பொதிந்துள்ள ஒன்பது துவாரங்களை உடைய, சிறு குடிலாகிய இவ்வுடலை நீரிலே தோன்றுகின்ற (நீர்க்) குமிழியினும் வேகமாக அழிகின்ற. மாயமான சாம்பலாகப் போகின்ற உடலை விரும்பி, எப்போதும் சில சாரம் இல்லாத (உபயோகமில்லாத) மருந்துகளையும் பல விதயோக வகைகளையும் உபயோகித்துப் பார்த்து - அநுபவித்தும் பார்த்து,

வேதனைப் படுகின்ற மனத்தில் பயம் (அச்சம்) துன்பம் போதும் போதும் என்றுணர்ந்து, இனி, நானும் உன்னுடைய அழகிய தண்டை எப்போதும் சூழ்ந்துள்ள திருவடி மலரை அடைவேனோ (தெரிய இல்லையே)

தாவி இடம் சற்றும் இல்லாமல் நெருங்கும் அசுரர்கள் எல்லாரும் இறந்துபடவும், எழுகிரிகள் இடிபடப் பொடியாகவும், காட சிக்கு இன்பம் தரும கடல வற்றிப் போகவும்

தேவர்களும் சிறை நீங்கி அவர்களுடைய (அமராவதி) என்னும் ஊரில் விளங்கவும் விட்ட (செய்வித்த) ஆதரவானவனே!

அழகிய படங்கள் பொருந்தும் ஒரு ஆயிரம் முகங்களைக் கொண்ட

விடதர கந்துகி, மேரு வில் வளைவுதன் முன், புர நீறெழ (105)
வெயில நகை தந்த புராரி, மதன கோபர்

விழியினில் வந்து, பகீரதி மிசை வளரும் திருவா, வட
விஜயபுரந்தனில் மேவிய பெருமாளே

விரிஞ்சிபுரம் 308

(308) மனைவயம் (5) (ப) 1½+1½+2

நிகரில் பஞ்ச பூதமும நினையும் நெஞ்சும் ஆவியும்
நெகிழ வந்து நேர்படும அவிரோதம்
நிகழ் தரும் ப்ரபாகர, திரவயம் பராபர
நிருப அம் குமார சிவ என வேதம்
சகர சங்க சாகரம் என முழங்கு வாதிகள்
சமய பஞ்ச பாதகர அறியாத
தனிமை கண்டதான கிண கிணிய தண்டை சூழ்வன
சரண புண்டரிகம் அது அருள்வாயே
மகர விம்ப சீகர முகர வங்க வாரிதி
மறுகி வெந்து வாய்விட நெடு, வான
வழிதிறந்து சேனையும், எதிர மலைந்த சூரனும்
மடிய, இந்திராதியர் குடியேற

ஷம் தரிப்பதான பாம்பாகிய ஆதிசேடன், மேருமலை என்னும் வில்லின
நா
ணு) பூட்டப்பட்டு, அவ்வில் வளைபடு முன்னரே, திரிபுரங்கள் சாம்பலாக
ஒன்
) வீசும் கிரிப்பை வெளியிட்ட புராரி (திரிபுரப்பகைவர்), மன்மதனை
கோ
பித்து (எரித்தவர்) ஆகிய சிவபெருமானது
ணீற் பொறியாகப் பிறந்து, கங்கையின் மீது வளர்ந்த சிறுவனே!
வட
விஜயபுரம் என்னும் தலத்தில வீற்றிருக்கும் பெருமானே

விரிஞ்சிபுரம் 308

நீ
பயில்லாத பஞ்ச பூதங்களும், நினைக்கின்ற நெஞ்சும், உயிரும், நெகிழும்படி
வந்து
ந் கூடுகின்ற 'விரோத மினமையை, அவிரோத ஞானத்தை
கூ
டுவிக்கின்ற ஞான ஒளி வடிவினனே (ஞான சூரியனே), அழிவில்லாத மோன
ஞா
பரம் பொருளே! அரசே! அழகிய குமர வேளே என்று வேதங்கள் முழங்குவதும்
கரர்களால் ஏற்பட்டதும், சங்குகள உள்ளதுமான, கடல் போல ஒலி எழுப்பி
போத
ம செயவோராம் சமய வாதிகளாகிய பஞ்ச பாதகர்கள் அறியாததும்,
ஊழிக் காலத்தில) தனித்து நிற்பதுமான, கிண்கிணியும் தண்டையும்
சூழ்
ந்துள்ள உனது திருவடித் தாமரை யதனைத் தந்தருள்வாயே-
மகர மீன்கள் உள்ளதும், ஒலி கொண்டதும், (சீகரம்) அலையுள்ளதும், (முகரம்)
ஒலி
கொண்டதும், (வங்கம்) மரக்கலங்கள செலவனவுமான கடல் கலங்கி
ஆடு
ண்டு கொந்தளிக்கவும், பெரிய ஆகாய
ழியைத் திறந்து (அந்தி) சேனைகளும், எதிர்த்துப் போர் செய்த
சூர
னும் மாண்டு போக, இந்திராதி தேவர்கள (விண்ணுலகிற்) குடியேற

சிகர துங்க மால் வரை தகர, வென்றி வேல் விடு
 சிறுவ, சுந்தர சேகர பெருவாழ்வே

திசை தொறும் ப்ரபுபதி திசை முகன் பராவிய
 திருவிரிஞ்சை மேவிய பெருமாளே.

(309) மோகனம் (16½) 309 (6) 13/13/3/2 திஸ்ர நடை

மருவும அரசு பூதம் உரிமை வந்திடாது
 மலம் இது என்று போட அறியாது
மயல் கொள் இந்த வாழ்வு அமையும், எந்த நாளும்
 வகையில் வந்து இராத அடியேனும்
உருகி அன்பினோடு உனை நினைந்து நாளும்
 உலகம் என்று பேச அறியாத
உருவம் ஒன்று இலாத பருவம் வந்து சேர
 உபய துங்க பாதம் அருள்வாயே

அரி விரிஞ்சர் தேட அரிய தம்பிரானும்
 அடி பணிந்து பேசி கடையூடே

அருளக என்ற போத பொருள் இது என்று காண
 அருளும் மைந்த, ஆதி குருநாதா
திரியும் உம்பர் நீடு கிரி பிளந்து சூரர்
 செரு அடங்க வேலை விடுவோனே
:

சிகரங்களை உடைய (துங்க) உயர்ந்த (மால்) மாயையில் வல்ல
கிரௌஞ்சமலை பொடிபட்டழிய, வெற்றி வேலைச் செலுத்தின
இளையோனே! சந்திரனை முடியிற் சூடியுள்ள சிவனது மேலான செல்வமே
திசைகள் தோறும் உள்ள மேன்மை பொருந்திய அரசர்களும்
பிரமனும் துதி செய்த திருவிரிஞ்சிபுரத்தில் வீற்றிருக்கும் பெருமானே.

309

(309) பொருந்தியுள்ள (மண், நீர், தீ, காற்று, வான்) என்னும் ஐந்து
பூதங்களுக்குச் சொந்தமாகாத வண்ணம், (இது) இந்த உடல். மலம்
(அழுக்கு) என்று உதறித் தள்ள அறியாமல்
மயக்கம் கொண்ட இந்த வாழ்வு போதும் என்று எந்த நாளிலும் அத்தகைய
எண்ணம் நன்கு மனத்தில் தோன்றுதல் இல்லாத அடியேனும்
உள்ளம் உருகி அன்போடு உன்னை தியானம் செய்து, (நாளும்) இடையறாது
தியானம் செய்து. பிரபஞ்ச விஷயங்கள் என்று பேசும் பேச்சே பேச அறியாது
உருவம் ஒன்றும் இல்லாதது ஆகிய ஐக்கிய நிலையாகிய (சீவன்
சிவத்துடன் இரண்டறக் கலக்கும் நிலை) பருவத்தினை அடியேன் பெறுமாறு
உனது இரண்டு பரிசுத்தமான திருவடிகளைத் தந்து அருள்வாயே.
திருமாலும், பிரமனும் தேடுதற்கு அரியவரான தனிப்பெருந்தலைவராகிய
சிவபெருமானும், உனது திருவடிகளிற் பணிந்து பேசி: (பிரணவத்தின்)
முடிவான உட்பொருளை (உபதேசித்து)
அருளுக என்று கேட்ட போது, உண்மைப் பொருள் இதுவே என்று கண்டு
மகிழ, உபதேசித்தருளிய திருக்குமாரனே! ஆதி சிவனுக்கும் குருநாதனே!
(சூரன் செல்லும் இடம் எல்லாம் உடன்) திரிந்து (உமையா) வின் அளாவி நீண்டுயர்ந்த
எழுகிரியைப் பிளந்து சூரனுடைய போர் நடுங்கும்படி வேலாயுதத்தைச் செலுத்தி
யவனே

செயல் அமைந்த வேத தொனி முழங்கு வீதி
திருவிரிஞ்சை மேவு பெருமாளே.

விருத தாசலம் 310

(310) ஹரிகாம்போதி (16) (ஂ) ஆதி-2 களை

திரு மொழி உரை பெற அரன உனதுழி பணி
செய, முனம், அருளிய குளவோனே

திறல உயர மதுரையில் அமணரை உயிர கழு
தெறிபட மறுகிட விடுவோனே
ஒருவ அரும், உனது அருள் பரிவிலர் அவர்களின
உறு படர் உறும எனை அருள்வாயோ
உலகினில் அனைவர்கள் புகழ்வுற அருணையில
ஒரு நொடி தனில வரு மயில் வீரா
கரு வரி உறு, பொரு கணை விழி குறமகள்
கணின எதிர தரு என முனம் ஆனாய்

கரு முகில பொரு நிற அரி திரு மருமக
கருணையில மொழி தரு முதலவோனே
முருகு அலர் தரு உறை அமரர்கள சிறைவிட
முரண் உறும் அசுரனை முனிவோனே
முடியவர் வடிவறு சுதிகரம் உறை தமிழ்
முதுகிரி வலம வரு பெருமாளே.

3ழுக்கம் அமைந்த- 3ழுக்கத்துடன் ஒதப்பட்ட வேதத்தின் 3லி
முழங்கும் வீதிகளை கொண்ட திருவிரிஞ்சை மேவிய பெருமானே

விருத்தாசலம் 310

ஞ முதி மொழியாம் பிரணவப் பொருளின் விளக்கப்பொருளை பெறச் சிவ
